**செய்தி வெளியீடு எண்:1224** **நாள்:28.11.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

**திருவள்ளூர் மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு நிவாரண உதவிகளை வழங்கினார்கள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (28.11.2021) தொடரும் வடகிழக்குப் பருவமழையையொட்டியும், வங்கக் கடலில் உருவாகிய காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாகவும், திருவள்ளூர் மாவட்டத்தில் மிக அதிக கனமழையால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்து, தேங்கியுள்ள மழைநீரை போர்க்கால அடிப்படையில் அகற்றிடுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அரசின் சார்பில் நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

தமிழகத்தில் தொடரும் வடகிழக்குப் பருவமழையையொட்டியும், வங்கக் கடலில் நிலவும் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாகவும் சென்னை மற்றும் மாநிலம் முழுவதும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 7-ஆம் தேதி தொடங்கி இரவு, பகல் பாராமல் பல்வேறு மாவட்டங்களுக்கு நேரில் சென்று சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கியும் வருகிறார்கள். மேலும், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் தொடர்ந்து நேரில் சென்று அரசின் சார்பில் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்திட உத்தரவிட்டதன் அடிப்படையில், பெரும்பாலான இடங்களில் மழைநீர் வடிந்து வருகிறது.

மேலும், பொதுமக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளவும்

அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளதோடு, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து நிவாரண உதவிகளை வழங்கி, மழைக் காலங்களில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்திட முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு, பொதுமக்களுக்குத் தேவையான உரிய சிகிச்சைகளும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னையில், கடந்த 200 ஆண்டுகளில் ஒரே மாதத்தில் 1000 மி.மீ மழை பதிவாவது தற்போது நான்காவது முறை என வானிலை வல்லுநர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த தொடர்மழைக் காலத்தில் உயிர்ப்பலிகளைத் தடுத்து; இயன்றவரை உடமைச்சேதங்களைக் குறைத்தும்; பாதிப்புகள் விரைந்து சரிசெய்யப்பட்டும்; நிலைமை கட்டுக்குள் இருப்பதை உறுதிசெய்திட, ஓய்வுறக்கமின்றி நாள் முழுதும் கொட்டும் மழையிலும் ஒருங்கிணைந்து பணியாற்றி வரும் மாநகராட்சி, மின்துறை, பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, காவல்துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். மேலும், மக்களைக் காக்கும் இப்பணியில் தங்களை அர்ப்பணித்து பணியாற்றும் அனைத்துத் துறை அதிகாரிகளுடனும் தாமும் களத்தில் நிற்பதாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தில் அடுத்த சில நாட்களுக்கும் மிக அதிக மழை தொடரும் என அறிவிக்கப்பட்டிருப்பதால், மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் அனைவரும் நேரம், காலம் பார்க்காமல் களத்தில் இருந்து நிவாரணப் பணிகளை தொடந்து மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை (28.11.2021) திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சி, பத்மாவதி நகரில் வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட்டு, ஆய்வு செய்து, தேங்கியுள்ள மழைநீரை உடனடியாக அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் பத்மாவதி நகரிலிருந்து வேலப்பன்சாவடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வரை 2 கி.மீ. நடந்தே சென்று வெள்ளப் பாதிப்புகளைப் பார்வையிட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து நிவாரண நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

திருவேற்காடு நகராட்சி, வேலப்பன்சாவடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி நிவாரண முகாமினை பார்வையிட்டு, அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள 300-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்கள். மேலும், வேலப்பன்சாவடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் நடைபெற்று வரும் சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாமையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, பூவிருந்தவல்லி நகராட்சி, அம்மன் கோவில் தெரு, காவலர் குடியிருப்பில் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட்டு, தேங்கியுள்ள மழைநீரை விரைந்து அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தி, பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

ஆவடி மாநகராட்சி, ஸ்ரீராம் நகர் மற்றும் திருமுல்லைவாயல், கணபதி நகர் ஆகிய பகுதிகளில் கனமழையின் காரணமாக வெள்ளம் தேங்கியுள்ள மழைநீரை இயந்திரம் மூலம் வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று பார்வையிட்ட 4 இடங்களிலும் சாலை மற்றும் தெருக்களில் பெருந்திரளாக நின்றிருந்த பொதுமக்களிடம், மழைக்காலங்களில் நோய்த்தொற்று ஏற்படாவண்ணம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும், கொரோனா காலத்தில் அனைவரும் முகக்கவசம் அணிந்து பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்றும்,

கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என்றும் பரிவுடன் எடுத்துரைத்தார்.

கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடச் செல்லும் வழியில், ஆவடி மாநகராட்சி, மூர்த்தி நகர், பூவிருந்தமல்லி நெடுஞ்சாலையில் சாலையோரக் கடையில் தேநீர் அருந்தி, பொதுமக்களிடம் கலந்துரையாடினார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பல்வேறு இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிவாரண உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு வழங்கினார்கள்.

சென்னை, வில்லிவாக்கத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு அருகில் நடைபெற்று வரும் கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாமை பார்வையிட்டு, மருத்துவ அலுவலர்களிடம், “இன்று எவ்வளவு நபர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டார்கள்?” எனக் கேட்டறிந்து, முகாமிற்கு வரும் பொதுமக்கள் அனைவருக்கும் மாலை வரை இருந்து தடுப்பூசி செலுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு.சா.மு. நாசர், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கே. ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆ. கிருஷ்ணசாமி, பெருநகர சென்னை மாநகரக் காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., மாவட்ட நிவாரணப் பணிகள் கண்காணிப்பு அலுவலர் டாக்டர் இரா. ஆனந்தகுமார், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**